மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறைகள் இருக்கின்றன. விதி 35 (3)-ல்—

" When all the questins for which an oral answer is desired have been called the Speaker may, if time permits, call again any question which has not been asked by reason of the absence of the member in whose name it stands . . . ."

என்று இருக்கிறது. கேட்காமல் இருக்க வேண்டும். கேள்வி கேட்டு விடை எல்லாம் கொடுத்து, துணைக் கேள்விகள் எல்லாம் கேட்கப்பட்ட பிறகு மறுபடியும் எடுத்துக் கொள்ள முடியாது. இந்த அவையில் அது எழுப்பப்படாமல் இருந்தால் மறுபடியும் எழுப்பலாம். ஆகவே, மறு படியும் அதை எழுப்புவது முறையல்ல.

4. காவல்துறைத் தலைமை அதிகாரி அலுவலகக் கட்டடத்தில் புதிய கொடி பறப்பது குறித்து.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஐ.ஜி. ஆபீசில் தொன்று தொட்டு தேசீயக் கொடி பறந்து கொண்டிருந்தது. ஒரு சில நாட்களாக தேசீயக் கொடி பறக்க வில்லை. புதிதாக ஒரு கொடி இப்போது பறந்து கொண் டிருக்கிறது. இது ஒருவேளை மாநில சுயாட்சிக் கொடியா அல்லது வேறு எந்தக் கொடியோ என்று நாங்கள் எல்லாம் ஐயப்படுகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—அது என்ன கொடி, எந்த அரசாங்க உத்தரவின்பேரில் பறக்கிறது என்பதை அவைக்குத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பல ஆண்டுக் காலமாக ஐ.ஜி. ஆபீஸ் கட்டடத்தின் முகப்பில் இந்திய தேசீயக் கொடிதான் பறந்து கொண்டிருந்தது. திடீரென்று ஒரு வாரத்திற்கு முன்பு என்று கருது கிறேன். மத்திய அரசிலிருந்து ஒரு உத்தரவு வந்தது. ஐ.ஜி.ஆபீசில் இந்திய தேசீயக் கொடி பறக்கக்கூடாது என்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. எல்லா மாநிலங்களுக்கும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போல் இங்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஐ.ஜி. சர்க்காருக்கு எழுதிக் கேட்டார்—வெறும் போஸ்ட் இருப்பதா அல்லது கொடி போடுவதா என்று. தமிழ் நாடு அரசினுடைய சின்னத்தை இணைத்து ஏற்கெனவே போலீசாருக்குரிய நீல நிற வண்ணக் கொடி பறக்க விடப்பட்டிருக்கிறது. இப்போது ஐ.ஜி. ஆபீசில் மாத்திரம் பறக்க ஆரம்பித்திருக்கிறது.